## November 24, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஜோஹன்னஸ்பர்க் நகரில், அந்நாட்டின் அதிபர் சிரில் ராமபோசாவுடன் பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை (நவ.23) இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.
   i. வர்த்தகம், முதலீடு, சுரங்கம், அரிய கனிமங்கள், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.), உணவு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்து வது குறித்து விரிவாக ஆலோசித்த இருவரும் தெற்குலகின் குரலை உயர்த்துவதற்கு கூட்டாகப் பணியாற்ற உறுதிபூண்டனர்.
   ii. தென்னாப்பிரிக்காவுக்கு மூன்று நாள்கள் அரசுமுறைப் பயணமாக கடந்த வெள்ளிக்கிழமை (நவ.21) வந்த பிரதமர் மோடி, ஜோஹன்னஸ்பர்க் நகரில் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்றார். இந்த மாநாட்டை யொட்டி, தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசாவுடன் ஞாயிற்றுக்கிழமை அவர் இருதரப்பு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்.
   iii. இந்தியாவுக்கு சிவிங்கிப் புலி களை வழங்கும் திட்டத்துக்காக தென்னாப்பிரிக்காவுக்கு பிரத மர் மோடி நன்றி தெரிவித்தார். 2026-இல் பிரிக்ஸ் கூட்டமைப்பின் இந்தியத் தலைமைக்கு தென்னாப் பிரிக்க அதிபர் ராமபோசா ஆதரவு தெரிவித்தார்.
   iv. இந்திய நிறுவனங்கள் 130 கோடி டாலர் முதலீடு: ஆப்பிரிக்க பிராந்தியத்தில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக தென்னாப்பிரிக்கா உள்ளது. கடந்த 2023-24-இல் இருதரப்பு வர்த்தக மதிப்பு 1925 கோடி டாலர்களாகும். தென்னாப்பிரிக்காவில் மருந்துதயாரிப்பு, தகவல் தொழில்நுட்பம், வாகனத் தயாரிப்பு, வங்கி, சுரங்கம் உள்பட பல்வேறு துறைகளில் கடந்த 2000 முதல் 2024 வரை இந்திய நிறுவனங்கள் 130 கோடி டாலருக்கும் மேல் முதலீடு செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
2. அரசமைப்புச் சட்டத்தின் 240-ஆவது பிரிவின்கீழ் சண்டீகர் யூனியன் பிரதேசத்தைக் கொண்டுவரும் மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் எதிர் வரும் குளிர்கால கூட்டத் தொடரில் இம்மசோதா கொண்டுவரப் படாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது.
   i. கடந்த 1966-இல் பஞ்சாபில் இருந்து ஹரியாணா மாநிலம் பிரிக்கப்பட்ட பிறகு, இரு மாநிலங்களின் பொதுத் தலைநகராக சண்டீகர் உள்ளது. தலைநகர் பிரச்னையைக் கருத்தில் கொண்டு, சண்டீகர் யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டு, சுதந்திரமான தலைமைச் செயலர் மூலம் நிர்வகிக்கப்பட்டு வந்தது.
   ii. கடந்த 1984-இல் பஞ்சாப் ஆளுநரின் கட்டுப்பாட்டின்கீழ் சண்டீகர் கொண்டுவரப்பட்டது. தலைமைச் செயலர் பதவி, ஆளுநரின் ஆலோசகர் பதவியாக மாற்றப்பட்டது.
   iii. கடந்த 2016-இல் பழைய நடைமுறைப்படி சுதந்திரமான நிர்வாகியை நியமிக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால் எதிர்க்கட்சிகள், கூட்டணி கட்சிகளின் கடும் எதிர்ப்பால் அந்த நடவடிக்கை வாபஸ் பெறப்பட்டது.
   iv. இந்தச் சூழலில், டிசம்பர் 1-ஆம் தேதி தொடங்கும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்படும் மசோதாக்களின் பட்டியல் சனிக்கிழமை வெளியானது. அதில் பேரவை இல்லாத பிற யூனியன் பிரதேசங்களைப் போல சண்டீகரை அரசமைப்புச் சட்டப் பிரிவு 240-இன்கீழ் கொண்டுவர வகை செய்யும் மசோதா (131- ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்) இடம் பெற்றிருந்தது.

v. எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு: சண்டீகரில் குடியரசுத் தலைவர் நேரடியாக சட்டமியற்ற அதிகாரமளிப்பதுடன், சுதந்திரமான நிர்வாகியை நியமிக்கவும் வழிவகுக்கும் இம்மசோதாவின் மூலம் பஞ்சாபிடம் இருந்து சண்டீகரைப் பறிக்க முயற்சிப்பதாக மத்திய அரசு மீது எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

3. உத்தர பிரதேச மாநிலம், காசி எனும் வாரணாசியில் வரும் டிசம்பர் 2-ஆம் தேதி காசித் தமிழ்ச் சங்கமம் 4.0 நிகழ்ச்சி தொடங்குகிறது.

i. 2022-ஆம் ஆண்டு முதல் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி வாரணாசியில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியானது தமிழ்நாடு மற்றும் காசி இடையேயான நாகரிக பிணைப்புகளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்படுகிறது. வாரணாசி தொகுதியின் எம்.பி.யாக இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி, காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியை நடத்த அறிவுறுத்தியபடி கடந்த 3 ஆண்டுகளாக இந்நிகழ்ச்சி சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

ii. இந்தச் சங்கமம் நிகழ்ச்சியானது சென்னையில் உள்ள ஐஐடி கல்வி நிறுவனமும், வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகமும் ஒருங்கிணைத்து நடத்தப்பட உள்ளது. இவை தவிர, கலாசார அமைச்சகம், தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம், சுற்றுலா அமைச்சகம் உள்ளிட்ட அமைச்சங்களும், இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலா கழகம், உத்தர பிரதேச அரசு ஆகியவை இந்நிகழ்வை ஒருங்கிணைக்கின்றன.

iii. தற்போதைய நான்காவது பதிப் பானது, மேம்பட்ட கற்றல் பரிமாற்றங்கள், கலாசார ஈடுபாடு, கல்வித் தொடர்புகள் மற்றும் அதிக இளைஞர் பங்கேற்பு மூலம் ஈடுபாட்டை மேலும் ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

iv. நிகழாண்டு நிகழ்ச்சிகளான கருப்பொருள், தமிழ் கற்கலாம் என்பதாகும். இது இந்தியா முழுவதும் தமிழ்க் கற்றலை ஊக்குவிப்பதுடன், இந்தியாவின் பாரம்பரிய மொழியியல் மற்றும் இலக்கியப் பாரம்பரியத்திற்கான பரந்த அளவிலான பாராட்டை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

4. ஆந்திர மாநிலம், புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு விழா நடைபெற்று வருகிறது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு என பல முக்கியப் பிரமுகர்கள் அதில் பங்கேற்றனர்.

5. ஃஎப்1 கார் பந்தயத்தின் 22-ஆவது ரேஸான லாஸ் வேகஸ் கிராண்ட் ப்ரீயில், நெதர்லாந்து வீரரும், ரெட்புல் டிரைவருமான மேக்ஸ் வெர்ஸ்டா பென் வெற்றி பெற்றார்.

6. ஜப்பானில் நடைபெறும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான டெஃப்லிம்பிக்ஸ் போட்டியில், இந்தியாவின் அபினவ் தேஷ்வால் தங்கப் பதக்கம் வென்றார்.

i. 25 மீட்டர் பிஸ்டல் ஆடவர் தனிநபர் பிரிவில் அவர், இறுதிச்சுற்றில் 44 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார்.

7. ஹிந்து தெய்வமான வமான பராசக்தி குறித்த நூலான தேவி மாஹாத்மியத்தின் அடிப்படையில் தீட்டப்பட்ட 200 ஆண்டுகால பழைமையான ஓவியங்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப பிரிட்டன் அரசு தடை விதித்துள்ளது.

8. நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கி அழிக்கும் 'மாஹே' வகை போர்க்கப்பல் முதல்முறையாக கடற்படையில் திங்கள்கிழமை (நவ.24) இணைக்கப்பட உள்ளது. இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

i. மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் உள்ள கடற்படை கப்பல் கட்டும் தளத்தில்

'மாஹே' போர்க்கப்பல் கடற்படையில் இணைக்கப்பட உள்ளது. இதன்மூலம், ஆழமில்லாத கடற்பரப்புகளில் நீர்மூழ்கிக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் 'மாஹே' வகையின் முதல் கப்பல் கடற்படையில் இணைக்கப்பட உள்ளது. ராணுவத் தலைமை தளபதி உபேந்திர துவிவேதி தலைமையில், இந்த நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

ii. இந்தக் கப்பலின் இணைப்பு உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு ஆழமற்ற கடற்பகுதிகளில் போரிடக் கூடிய அதிநவீன போர்க் கப்பல்களின் தொடக்கமாக இருக்கும்.

iii. இந்தக் கப்பலின் 80 சதவீதத்துக்கும் அதிகமான பாகங்கள் இந்தியாவில் உருவானவை. இது போர்க் கப்பல் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் ஒருங்கிணைப்பில் இந்தியாவின் சிறந்த திறனை எடுத்துரைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv. தனது நீர்மூழ்கிக் கப்பல்களின் வலிமையை அதிகரிக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியான நிலையில், மாஹே வகை போர்க்கப்பல் கடற்படையில் இணைக்கப்பட உள்ளது.

9. உச்சநீதிமன்றத்தின் 53-ஆவது தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் திங்கள்கிழமை (நவ.24) பதவியேற்கிறார்.

10. பருவநிலை உச்சிமாநாட்டின் தலைமைப் பொறுப்பில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிச் செயல்பட்ட பிரேஸிலுக்கு இந்தியா தனது முழு ஆதரவையும், பாராட்டையும் தெரிவித்துள்ளது.

i. மேலும், இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட பல முடிவுகளை வரவேற்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. அதேநேரம், பருவநிலை மாற்றத்தைத் தடுக்கும் திட்டங்களை வகுப்பதில் மாநாடு முழு வெற்றி பெற்றதாக இந்தியா வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை.

ii. பிரேஸிலின் பெலெம் நகரில் ஐ.நா.வின் வருடாந்திர பருவநிலை உச்சி மாநாடு (சிஓபி30) கடந்த 10- ஆம் தேதி முதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெற்றது. 194 நாடுகள் பங்கேற்ற இந்த மாநாட்டில், இந்தியா சார்பில் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் தலைமையிலான குழு பங்கேற்றது.

iii. பூமியை வெப்பமயமாக்கி வரும் புதைபடிம எரிபொருள் பயன்பாட்டைக் கைவிட ஐ.நா.பருவநிலை மாற்ற மாநாட்டில் எந்த ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை.